# பங்கு வெளியீட்டில் உஜ்ஜிவான் பைனான்சியல்

## நாளை தொடங்குகிறது

ஜுவாலித் வியாஸ்
இக்கனாமிக் டைம்ஸ் ஆய்வு பிரிவு

உஜ்ஜிவான் பைனான்சியல் சர்வீசஸ் நிறுவனம் புதிய பங்கு வெளியீட்டில் களம் இறங்குகிறது. இந்த வெளியீடு நாளை (வியாழக்கிழமை) தொடங்குகிறது.

### செபிக்கு விண்ணப்பம்

உஜ்ஜிவான் பைனான்சியல் சர்வீசஸ் 2005–ஆம் ஆண்டில் நகர்ப்புற ஏழை மக்களுக்கு நிதிச் சேவைகள் வழங்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது. சிறிய வங்கியாக செயல்பட பாரத ரிசர்வ் வங்கி இதற்கு உரிமம் அளித்துள்ளது. இந்நிறுவனம் புதிய பங்கு வெளியீட்டிற்கு அனுமதி வேண்டி கடந்த ஆண்டு டிசம்பர் 31–ந் தேதி செபிக்கு விண்ணப்பித்தது. வெளியீட்டுக்கு அனுமதி கிடைத்துள்ள நிலையில் நாளை பங்கு வெளியிடுகிறது.

இவ்வெளியீடு மே 2–ந் தேதி (திங்கள்கிழமை) நிறைவடைகிறது. இதன் மூலம் ரூ.875 கோடி முதல் ரூ.882.50 கோடி வரை திரட்டிக் கொள்ள இந்நிறுவனம் உத்தேசித்துள்ளது. இதில் ஒரு பங்கின் விலை ரூ.207–210–ஆக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. பங்கு வேண்டுபவர்கள் குறைந்தபட்சம் 70 பங்குகளுக்கு விண்ணப்பிக்க வேண்டும். அதன் பிறகு 70 என்ற மடங்கில்தான் விண்ணப்பிக்க முடியும்.

குறுங்கடன் நிதிச்சேவைத் துறையைச் சேர்ந்த எஸ்.கே.எஸ். மைக்ரோபைனான்ஸ் நிறுவனம், 2010–ஆம் ஆண்டில் புதிய பங்குகள் வெளியிட்டு நிதி திரட்டியது. அதற்குப்பின், ஏறக்குறைய 6 ஆண்டுகள் கழித்து, இத்துறையைச் சேர்ந்த ஈக்விட்டாஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் பங்குகள் அண்மையில் பட்டியலிடப்பட்டன. அடுத்து உஜ்ஜிவான் பைனான்சியல் பங்கு வெளியிடுகிறது. இத்துறையில் இந்நிறுவனம் 11.2 சதவீத சந்தைப் பங்கினைக் கொண்டுள்ளது.

### நிதி நிலை

2015 டிசம்பர் 31 நிலவரப்படி உஜ்ஜிவான் நிறுவனம் நிர்வகிக்கும் சொத்து ரூ.4,600 கோடியாகும். 470 கிளைகளுடன் 27.70 லட்சம் வாடிக்கையாளர்களுக்கு இந்நிறுவனம் சேவை அளித்து வருகிறது. 2010–11 முதல் 2014–15 வரை இந்நிறுவனத்தின் வருவாய் சராசரியாக 40 சதவீதம் வளர்ச்சி கண்டு வந்துள்ளது. நிகர லாபம் 60 சதவீதம் உயர்ந்து வந்திருக்கிறது. கடந்த நிதி ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் இந்நிறுவனம் ரூ.730 கோடி வருவாயில் ரூ.122 கோடி லாபம் ஈட்டியிருக்கிறது.